முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் ஆடி மாதம் 14 திகதி முதல்

சோபகிருது வருடம் ஆடி மாதம் 21 திகதி வரை

(30.07.2023 ஞாயிறு முதல் 06.08.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. உலகுக்கே நல் ஞானம்தர
   உயர் பழக்கவழக்கம் கொண்ட பாரதமே
   உலகுக்கே பேரறிவை புகட்ட
   உயர் ஞானிகளை கொண்ட தமிழகமே
2. தமிழகம் இந்தியா தன்னில்
   தக்க சோபகிருது நள்ளிதிங்கள்
   நேமமுற முன்னான்கீர் திகதிமேல் மூவேழு திகதிவரை
   நடக்கின்ற நிகழ்வாக வருங்கால பலன் குறித்த ஆசி
3. ஆசிதனை அகத்திய மகரிஷியும்
   அரங்கஞானி கேட்க உரைப்பேன்
   வாசி வென்ற ஞானிகள் படை
   வலம் வந்து காக்கின்ற தேசமதில்
4. தேசமதில் இன்று கலிமுற்றி
   தேவைக்கு மேலான பொருள்பற்று
   ஆசாபாச பேராசை வலை விழுந்து
   ஆளுமைகள் மக்களை வதைத்து
5. வதைத்து நாட்யையும் சீர்குலைத்து
   வறுமைக்கு தள்ளும் அவலமிருக்க
   பதைபதைத்து ஞானிகள் கூட்டம்
   பாமரரை காக்க சூட்சுமமாக அருள இருக்க

6. இருக்கவே இந்த நிலையிலும்
ஏமாற்றும் பகட்டானச் சூழலை
கருத்தாக மாற்றி இயல்புக்கு
கட்சிகள் அமைப்புகள் திரும்பாவிட்டால்
7. விட்டாலே அவரவர் பிழைகள்
விரைந்து வெளிப்பட்டு உலகில்
கட்டம் நலிவு அழிவென
கட்டாயம் ஆளுமைகள் அடைய நேரும்
8. நேருமை கொண்டு தெய்வ சக்தி
நீதி வழியாகத் தண்டனைகள்
அரங்கேறி மாற்றம் நிகழும்
ஆபத்தை உணர்ந்து ஆளுமைகள்
9. ஆளுமைகள் திருத்தம் செய்து
அலட்சியம் கொள்ளா தருமவழிக்கு
வலுவானப் பாதைகள் அமைத்து
வாக்குறுதிகளை முழுமைபட நிறைவேற்றி
10. நிறைவேற்றி சேவைதனை தொடர
நிதிவளம் நீதிபலம் குன்றாத
அரசாக ஆளுமையாக இந்தியாதமிழகம்
ஆற்றல் கூடி நல்லாட்சி பெறும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஆடி மாதம் 14ம் நாள் 30.07.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் 21ம் நாள் 06.08.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

உலகிற்கே நல்ஞானம் வழங்கும் வகையிலே உயர்வான பண்புகளை கொண்ட உயர் பழக்க வழக்கங்களை கொண்டிட்ட பாரத தேசமே உலகிற்கே பேரறிவை புகட்டும் வகையிலே உண்மை ஞானப் பேரறிவை பெற்றிட்ட உயர் ஞானிகளை கொண்டிட்ட தமிழகமே இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் ஆடி மாதம் 14ம் நாள் 30.07.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம்

**21**ம் நாள் **06.08.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை அரங்க மகான் கேட்க அகத்திய மகரிஷி யானும் எதிர்கால பலன்களை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

வெல்லற்கரிய வாசியை வென்று மரணமிலாப் பெருவாழ்வினை பெற்றிட்ட வல்லமை மிக்க ஞானிகள் படை வலம் வந்து காக்கின்ற புனித தேசமாகிய பாரத தேசத்தினிலே இன்று கலி முற்றி தேவைக்கு மேலாக பேராசைப்பட்டு பொருள் பற்றினாலும் ஆசாபாசாங்களினாலும், பேராசையினாலும், மக்களை வதைத்து நாட்டையும் சீர்குலைத்து நாட்டையே வறுமைக்கு தள்ளும் அவலமான நிலை நாடெங்கும் இருக்கின்றதப்பா.

நடக்கும் இந்த அவலநிலை கண்டு நாட்டை காக்கும் ஞானிகள் கூட்டம் நாடெங்கும் இறங்கி பாமர மக்களை காத்திடவே சூட்சுமமாய் செயல்பட இருக்கின்ற படியினாலே இனி மேலாகினும் திருந்தி விடுங்கள். ஏமாற்றும் பகட்டான சூழலை அவரவரும் மாற்றி இயல்பான நிலைக்கு வாருங்கள் கட்சிகள் அமைப்புகள் மக்கள் என அனைவரும் ஏமாற்றாமல் தர்மநெறிக்கு வாருங்கள்.

தர்மத்தின் பாதையில் வந்துவிடாது தொடர்ந்து தீமையான வழியிலே சென்று கொண்டு இருந்தால் அவரரின் பிழைகள் தானாகவே வெளிப்பட்டு பிழை செய்தோர் கஷ்டங்களை அனுபவிக்க நேருமப்பா, நலிவுகள் உண்டாகும், எல்லாவற்றில் இருந்தும் விலகிட நேரிடும்.

தெய்வத்தின் சக்தி நீதி வழி வெளிப்பட்டு தீமை செய்வோர் தண்டனைகள் அடைந்திட நேருமப்பா. ஆதலினாலே வரவிருக்கும் ஆபத்தை உணர்ந்து அவரவரும் தம்மை திருத்தி கொள்ளுங்கள். அலட்சியமாக இருந்திடாதீர்கள் தர்மத்தின் பாதையை தேர்ந்தெடுத்து வலுவான பாதையை அமைத்து தர்மவழி நடந்து மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை முழுமைபட நிறைவேற்றி சேவை மனப்பான்மையுடன் நடந்து வாருங்கள்.

அவ்விதமே நீதி வழி செயல்பட நாட்டின் நீதி வலுவாகிடும், பொருள் வளமும் பெருகிடும் வலுவான அரசாக நீதிபலமும், நிதிவளமும் குன்றாத அரசாக நல்லாட்சியாக மாறிடும் நாடும் மேன்மேலும் வளம் பெறும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–